6th November 1965]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் தலைவர் அவர்களே, நாம் இந்தி வளர்ச்சிக்காக நிறைய பணம் செலவு செய்துகொண் டிருக்கிறோம். இந்தி படிக்க வேண்டும் என்று விரும்பக்கூடிய சட்டசபை அங்கத்தினர்களுக்கு சட்டசபை கூட்டம் நடக்கும் பொழுது ஒரு இந்தி ஆசிரியர் வைத்து பாடம் சொல்லிக் கொடுப் பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பினால் ஏற்பாடு செய்யலாம். ஆனால், சட்டமன்றம் கூடுகின்ற 4, 5 நாட்களுக்கு மட்டும் பாடம் சொல்லிக்கொடுத்தால், திரும்பியும் பாடம் மறந்து போய் விடும். திரும்பவும் அக்ஷராப் பியாசம் செய்யவேண்டியிருக்கும்.

தொழில் நிறுவனங்கள்

* 316 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மாநில அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்டு, அவர்களது மேலாதிக்கத்தின்கீழ் உள்ள தொழில் நிறுவனங்களில் ஒழுங்கீனங் களை ஒழிப்பதற்கென, தனிக் கண்காணிப்பு அதிகாரிகளை நியமிப் பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No. Government are not aware of any graft in the Industries sponsored or controlled by the State Government.

(*b*) Does not arise.

Machine Tool Factory

* 317 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to set up a Machine Tool Factory in Madurai district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government are investigating the possibilities to set up one or two machine tool plants in this State. Details of the projects and their location have not yet been worked out.

திரு. வை. சங்கரன் : மதுரை ஜில்லாவில் எந்தவிதமான கனரகத் தொழிலும் ஏற்படுத்தப்படவில்லை. வெகுகாலமாக இது சம்பந்தமாக 'ரெப்ரெசென்டேஷன்' வந்துகொண்டிருக்கிறது. இந்த ஒன்றையாவது மதுரை ஜில்லாவில் ஆரம்பிப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member is counting the chickens even before they are hatched. No decision has yet been taken even with regard to the organization and establishment of the Machine Tool Factory.